Dinamalar - 27/03/2023

# அகில இந்திய பல்கலை 'கிக் பாக்சிங்'

## அவினாசிலிங்கம் மாணவியர் அபாரம்



அகில இந்திய பல்கலை கிக் பாக்சிங் போட்டியில் நான்காம் இடம் பிடித்த அவினாசிலிங்கம் பல்கலை மாணவியர்.

**கோவை, மார்ச் 27–**

தேசிய அளவிலான பல்கலை இடையேயான 'கிக் பாக்சிங்' போட்டியில், கோவை, அவினாசிலிங்கம் பல்கலை மாணவியர் எட்டு பதக்கங்கள் வென்று, நான்காம் இடம் பிடித்தனர்.

அகில இந்திய பல்கலைகளுக்கு இடையேயான கிக் பாக்சிங்' போட்டி, உத்தர பிரதேசத்தில் உள்ள, வீர் பஹதுார் சிங் பூர்வாஞ்சல் பல்கலையில், நடந்தது. இதில் நாட்டின் பல்வேறு பல்கலைகளை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

**வெற்றி பெற்ற மாணவியர்:**

70 கிலோ எடைக்கு உட்பட்டோருக்கான 'லோ கிக்' பிரிவில், சங்கீதா, 70 கிலோ எடைக்கு மேற்பட்டோருக்கான 'பாயின்ட் பைட்' பிரிவில், கிருத்திகா ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

70 கிலோ எடைக்கு மேற்பட்டோருக்கான 'கிக் லைட்' பிரிவில், சரண்யா, 'லோ கிக்' பிரிவில், பூமிகா, 'புல் கான்டக்ட்' பிரிவில், ரூபிகா; 70 கிலோ எடைக்கு உட்பட்டோருக்கான 'பாயின்ட் பைட்' பிரிவில், கார்த்திகா தேவி, 'புல் கான்டக்ட்' பிரிவில் சினேகா மற்றும் 60 கிலோ எடைக்கு உட்பட்டோருக்கான 'புல்கான்டக்ட்' பிரிவில், திவ்யா ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர். ஒட்டுமொத்தமாக இரண்டு வெள்ளி மற்றும் ஆறு வெண்கலம் என எட்டு பதக்கங்கள் வென்று அகில இந்திய அளவில் அவினாசிலிங்கம் பல்கலை அணி நான்காம் இடம் பிடித்து அசத்தினர்.

வெற்றி பெற்ற மாணவியரை அவினாசிலிங்கம் பல்கலை வேந்தர் தியாகராஜன், துணை வேந்தர் பாரதி, பதிவாளர் கவுசல்யா, டீன் விக்டோரியா நவோமி, உடற்கல்வித்துறை இயக்குனர் நந்தினி மற்றும் உடற்கல்வித்துறை பேராசிரியர்கள் பாராட்டினர்.